முதலாவது அனைத்துலகத் தமிழியல்

# ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"



**ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு**

தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

### ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

**பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர். ம. இரகுநாதன்
திரு. ஈ. குமரன்
திரு. க. அருந்தாகரன்

10, 11 ஜனவரி 2020
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | "தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு" |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாசிரியர்கள் | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| முதற்பதிப்பு | : | 10 ஜனவரி 2020 |
| வெளியிடுவோர் | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| பக்க அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 829 |
| அச்சிட்டோர் | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# பொருளடக்கம்


1. ஆசிச்செய்தி **கலாநிதி. ஆறு. திருமுருகன்** ix
2. வாழ்த்துரை **பேராசிரியர். சி. பத்மநாதன்** x
3. வாழ்த்துரை **பேராசிரியர். க. கந்தசாமி** xii
4. வாழ்த்துரை **கலாநிதி. க. சுதாகர்** xiii
5. முன்னுரை **பேராசிரியர். ம. இரகுநாதன்,** xiv
6. பதிப்புரை xvi


**இலக்கணம்**


7. இக்காலத் தமிழிலக்கணம் பேசும் காலங்கள்........ 1
8. ஈழத்தில் தமிழ் இலக்கண நூற் பதிப்பு முயற்சிகள்........ 5
9. மொழியாக்க இலக்கியமாகத் தென்னிலங்கைக் கவிதைகள்........ 14
10. தொல்காப்பியத்தில் கிளைமொழி வழக்குகளின் ஏற்புகள்........ 26
11. நடையியல் நோக்கில் நீண்டபயணம் நாவல் 32
12. நம்பி அகப்பொருளிலக்கணவமைவு........ 40
13. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வேணும் என்னும் துணைவினை........ 47
14. ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்களும் மன்யோசு பாடல்களும்........ 55
15. தற்காலத் தமிழில் எதிர்மறை வடிவங்கள்........ 67
16. வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கம்........ 75
17. சம்ஸ்கிருத உபமாலங்காரமும் தொல்காப்பியமும்........ 83
18. தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பில் வாக்கியக் கட்டமைப்பு.... 98


**இலக்கியம்**


19. ஈழத்து வரலாற்றினைக் கட்டமைப்பதில் ஈழமண்டலச்........ 107
20. சங்கப் பாடல்களில் குறிஞ்சி மலர்........ 116
21. "பள்ளு இலக்கியங்களில் மொழிக்கையாள்கை"........ 124
22. இயற்கை வளங்களும், திருக்குறளும்........ 135
23. பர்த்திருஹரியின் சிருங்காரசதகமும் வள்ளுவரின்........ 146
24. சங்கப் பனுவல்களில் மூத்தோர் வழிபாடாக நடுகல்........ 153
25. ஆற்றுப்படை இலக்கியங்களில் விளிம்புநிலை மக்கள்........ 161
26. கம்பராமாயண ஆராய்ச்சியில் பண்டிதமணி........ 170
27. திருக்குறளின் காலம் குறித்த ஆராய்ச்சிகள்........ 177
28. ஈழகேசரிப் பத்திரிகையும் தமிழ்ச் சிறுகதை இலக்கியமும்........ 186
29. சங்கத்தொகைப்பாடல்கள் வெளிப்படுத்தும் மணிக்கற்கள்........ 200
30. அருணகிரிநாதரின் பாடல்களில் முத்தமிழ்ச் செழுமை........ 207
31. இன்றைய வாழ்வியலில் திருக்குறளின் பங்கு........ 213
32. சங்கத் தமிழில் செவ்வியல் மாண்புகள்........ 219

67. மட்டக்களப்புத் தமிழரின் இல்லக் கட்டிடங்களும்........................................ 527
68. தமிழினத்தில் நாளும் கோளும் 538
69. முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழின் இசைநயம் 544
70. மலேசியத் தமிழ் முஸ்லிம்கள் - வாழ்வும் வளமும் 551
71. அருணாசலக்கவியின் இராம நாடகக் கீர்த்தனை 561
72. தமிழக இலங்கை பண்பாட்டுறவுகள் 568
73. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை........................................ 578
74. இசைநாடக ஆய்வுகளில் களையப்பட வேண்டிய சிக்கல்கள்........................................ 588
75. நாலாயிரம் திவ்யபிரபந்தங்களில் பண்களும், தாளங்களும்........................................ 597
76. விழுமியக் கல்வியும் மனிதகுல மேம்பாடும்........................................ 604
77. ஆய்வாக நாடக எழுத்துருவாக்கமும் நாடக பாட ஆய்வும்........................................ 612
78. சிற்றிலக்கியங்களில் நடனச் செய்தி 620

## நாட்டாரியல்

79. தமிழர் பண்பாட்டில் மட்டக்களப்பு பெண் தெய்வச் சடங்குகள் 631
80. சங்க இலக்கியங்களில் நாட்டாரிசை வடிவங்கள் 640
81. பழந்தமிழர் நம்பிக்கைகள் 650
82. நெடுந்தீவு வாழ்வியல் வரலாறும் மேம்பாடும் இடப்பெயராய்வினை........................................ 656
83. நாட்டுப்புற நிகழ்த்துக்கலையின் மூலம் பெருந்தெய்வத்தை வணங்குதல்........................................ 666
84. பழந்தமிழ் கலாச்சாரத்திலும், வாழ்வியலிலும் மறைந்திருக்கும்........................................ 674

## வரலாறும் ஏனையவையும்

85. இலங்கையில் இன முரண்பாடு : தீர்வுக்கான சிக்கல்கள் 685
86. ஈழத்து அரசியல் நாவல் வரிசையில் "எரிமலை": 696
87. திருமந்திரம் நல்கும் மூச்சு மாத்திரை 705
88. மலையகத்தில் வெகுசன அச்சு........................................ 713
89. தமிழ்ப்பெண்களுக்கெதிரான வன்முறைகள்........................................ 722
90. தமிழ்க் கல்வெட்டுப் பணிகள்........................................ 732
91. யாழ்ப்பாணம் நகரத்தின் தோற்ற காலமும், அதன் வளர்ச்சியும்........................................ 743
92. சித்தரிலக்கியங்களில் குண்டலினி யோகம் 751
93. வரலாறு பாட நூலின் அறிமுகம்........................................ 759
94. ஆழ்வார் பாசுரங்களில் அறிவியல்........................................ 773
95. வீரமுனையின் கூத்தியலும், அதில் பெண்களின் பங்களிப்பும்........................................ 782
96. மலையகப் பெண்களும் கலாசார மாற்றங்களும்........................................ 792
97. கற்பித்தற் செயற்பாட்டில் ஆரம்பக்கல்வி........................................ 800
98. தமிழ்மொழியை அயல்மொழியாகக் கற்கும் மாணவர்களின் எழுது........................................ 808
99. மக்களும் மாக்களும் 815
100. யாழ்ப்பாண மக்கள் மத்தியில் சினிமா இரசனை........................................ 819
101. யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் தமிழரசின் உருவாக்கம்........................................ 829
102. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் மலையக மக்களின் சாதியமும்........................................ 836

# யாழ்ப்பாண மக்கள் மத்தியில் சினிமா இரசனை திரையரங்குகளை முன்வைத்து ஓர் ஆய்வு

**தேவயசி வீரசிங்கம்,**
மாணவி, ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*mkvtyasi62@gmail.com*

**சிவசுப்பிரமணியம் ரகுராம்**
துறைத் தலைவர், ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*ragunadu2003@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்**

திரையரங்குகள் திரைப்படங்களை ,ரசிக்கும் ஒரு முக்கிய மையமாகத் திகழ்ந்து வருகின்றன. குறிப்பாக, திரைப்படங்களின் முழுமையான தொழில்நுட்பப் பரிமாணம் திரையரங்குகளிலேயே வெளித்தெரிவதாக திரை ,ரசனையாளர்கள் கூறுகின்றனர். மேலதிகமாக, திரையரங்குகளானது மக்கள் வாழ்க்கையில் ஆற்றுப்படுத்தல்களையும், விழிப்புணர்வுகளையும், செயற்பாடுகளையும் வழங்கும் கூடுதல் பொறுப்புக்களையும் சுமந்துவருகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் திரையரங்குகளின் தோற்றம், வளர்ச்சி, அவை மக்கள் மத்தியில் தங்கள் ,ருப்பை நிலைநிறுத்திக் கொண்ட விதம், பெற்றுக்கொண்ட செல்வாக்கு, திரையரங்குகளை ஒட்டிய ,ரசனை உருவாகக் காரணமாக இருந்த காரணிகளின் அடிப்படையில், யாழ்ப்பாண மக்கள் மத்தியில் சினிமா இரசனை திரையரங்குகளை மையமாக வைத்து எவ்வாறு மேலெழுந்து வந்தது தொடர்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. திரையரங்குகள் எப்படியான வாழ்க்கை முறைகளையும் ஆற்றுப்படுத்தல்களையும், விழிப்புணர்வுகளையும், செயற்பாடுகளையும் மக்களுக்கு வழங்கியுள்ளன என்பதனை அறிய, இந்த ஆய்விற்காக யாழ்ப்பாணத்தில் ,ருக்கக்கூடிய திரையரங்கு உரிமையாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள் ஆகியோருடன் திரைப்படத் திறனாய்வாளர்கள், விமர்சகர்கள், இரசிகர் மன்ற உறுப்பினர்களிடமிருந்து நேர்காணல்கள், குவிமையக் கலந்துரையாடல்கள மூலமாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் திரையரங்கு வழியான திரை இரசனை முன்னர் ஒரு குழு இரசனையாகக் காணப்பட்ட போதும், அது தற்போது பெருமளவிற்கு தனியாள் இரசனையாக மாற்றம் பெற்றுள்ளமையும், திரை இரசனையின் மையப்புள்ளியாக இருந்த திரையரங்குகள் தொலைக்காட்சிகளால் அந்த

முக்கியத்துவத்தை இழந்திருப்பதும், திரையரங்கு வழியாகப் பெறப்பட்ட திரைப்படம் பார்த்தலும் அதனைத் தொடர்ந்த கலந்தாய்வும் விவாதமும் கொண்ட ஒட்டுமொத்த திரை ,ரசனைத் தளம் அருகிப்போயிருப்பதும் ஆய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள் : திரையரங்குகள், திரை ,ரசனை, பொழுதுபோக்கு, ஆற்றுப்படுத்தல்

**அறிமுகம்**

திரையரங்கு என்பது, திரைப்படங்களைப் பார்ப்பதற்கான ஒரு ,டமாகும். திரைப்படத்தைப் பொதுமக்களுக்கு கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிப்பது திரையரங்குகள்தான். திரையரங்குகள் திரைப்படங்களை இரசிக்கும் ஒரு முக்கிய மையமாகத் திகழ்ந்து வருகின்றன. குறிப்பாக, திரைப்படங்களின் முழுமையான தொழில்நுட்பப் பரிமாணம் திரையரங்குகளிலேயே வெளித்தெரிவதாக திரை இரசனையாளர்கள் கூறுகின்றனர். விஞ்ஞான முன்னேற்றத்தால் இல்லத் திரையரங்கு (ஹோம் தியேட்டர்) என்று வீட்டில் வைத்து திரைப்படங்களைப் பார்த்தாலும் சினிமாவை திரையரங்கிற்கு வந்து பார்க்கும் அனுபவம் கிடைக்காது கிடைக்க வாய்ப்பும் இல்லை, காரணம், தியேட்டரில்தான் கவலைகள் தொலைகின்றன என்கின்றனர் திரை இரசனையாளர்கள்.

சில தற்காலிகத் தேவைகளுக்காக திறந்த வெளியிலும் திரைப்படங்கள் திரையிடப்படுவதுண்டு. ஆனாலும், மரபு வழியான திரையரங்கு, நாடக அரங்கைப் போல வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் இருக்கைகளைக் கொண்ட ஒரு பார்வையாளர் மண்டபத்தைக் கொண்டிருக்கும். திரையரங்கக் கட்டட நுழைவாயிலுக்கு அருகில் நுழைவுக் கூடம் ,ருக்கும். திரைப்படம் பார்த்துவிட்டு வரும் மக்களையும், திரைப்படம் முடிந்து வெளிவரும் மக்களையும் கொள்ளத்தக்கதான இடவசதியை அது கொண்டிருக்கும். பார்வையாளர் மண்டபத்தின் ஒரு பக்கத்தில் வெள்ளை நிறம் கொண்ட ஒரு பெரிய திரை ,ருக்கும். இதற்கு எதிர்ப்புறச் சுவரின் பின்புறத்தில் உயரத்தில் படமெறி கருவிகளுக்கான அறை இருக்கும். சுவரில் உருவாக்கப்படும் சிறிய துவாரங்களினூடாக படமெறி கருவிகளிலிருந்து படம் திரையில் விழுமாறு காண்பிக்கப்படும். பார்வையாளர் பின் பகுதியின் தளம் திரைக்கு அண்மையிலிருந்து பின்னோக்கிச் செல்லும் போது உயர்ந்து கொண்டு செல்வதாக படியமைப்புக் கொண்டதாகக் இருக்கின்றபடியால், பின்பகுதியில் அமைந்திருப்பவர்களுக்கு முன்னால் அமர்ந்திருப்பவர்கள் மறைக்காமல் படத்தைப் பார்க்க முடியும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாண நகரத்தில் 12 சினிமா திரையரங்குகள் இருந்துள்ளன. அத்திரையரங்குகள் அனைத்தும் மக்களைக் கவரும் விதத்திலேயே இயங்கியுள்ளன. ராஜா திரையரங்கு, ராணி திரையரங்கு, வெலிங்டன் திரையரங்கு, லிடோ திரையரங்கு (பழைய வின்சர்), றியோ திரையரங்கு, ஹரன் திரையரங்கு, சாந்தி திரையரங்கு, றீகல் திரையரங்கு, மனோகரா திரையரங்கு,

ஸ்ரீதர் திரையரங்கு, வின்சர் திரையரங்கு, மஹேந்திரா திரையரங்கு என்பவையாக அவை அடையாளப்படுத்தப்படுகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படம் பார்க்கும் மக்களது திரை ,ரசனை என்பது, அம்மக்ளின் எண்ணப் போக்குகள், ,ரசனைகள், செயற்பாடுகள், நடத்தைகள், அவர்களுக்குரிய நெருக்கடிகள், விருப்பங்கள், தெரிவுகள், பாதிக்கக்கூடிய விடயங்கள் என்பவற்றை வைத்து முன்வைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் திரையரங்குசார் திரைப்பட ,ரசனை பல்வேறு தளங்களில், பல்வேறு நோக்குகளில், பல்வேறு ,ரசனைப் பரிமாணங்களில் அமைந்து காணப்படுவதுடன், அது சிக்கலான தோற்றப்பாட்டையும் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

,லங்கையில் திரைப்படங்கள் பற்றிய ஆய்வை பலரும் மேற்கொண்டிருந்தாலும், திரையரங்கு வழியான திரைப்பட ,ரசனை என்கின்ற ஆய்வை ,துவரை எவரும் மேற்கொண்டதில்லை. மேலும், திரை ,ரசனை என்ற வகையில் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் கூட, திரையரங்கு வழியான திரைப்பட ,ரசனை என்ற தளத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**ஆய்வு முறையியல்**

ஆய்வின் பிரதான நோக்கமானது, கடந்த மூன்று தசாப்தமாக போரின் விளைவால் யாழ்ப்பாணத்தில் இருந்த ஏராளமான திரையரங்குகள் தமது இயக்கத்தை நிறுத்தியும், அழிவுற்றும் போனதுமான சூழலில், திரையரங்குகள் சார்ந்த திரை இரசனை எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் கண்டறிவதாவுள்ளது.

அது மட்டுமின்றி, மக்களிடம் காணப்பட்ட திரையரங்குகள் வழியான திரைப்பட இரசனை என்பது தற்போது விலகிச் செல்வதற்கான காரணத்தை சினிமா இரசனை, அழகியல் உணர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்தலும் இவ் ஆய்வின் நோக்கமாகிறது.

இவ் ஆய்வின் துணை நோக்கமாக, யாழ்ப்பாணத்து திரையரங்குகள் அழிவடைந்து சென்றமையால் திரை இரசனை வீழ்ச்சி கண்டு, நுகர்வுக் கலாசாரம் மாறியுள்ளதா என்பதனையும், அவ்வாறு இருந்தால் மக்களிடையே மீண்டும் ஓர் திரை இரசனையைக் குறிப்பாக, யாழ்ப்பாணத்துத் திரையரங்குகளால் அவ்வாறான ,ரசனையை மீளக்கட்டியெழுப்பக் கூடிய சூழ்நிலைக்கு ஏதுவான காரணங்கள் தற்போதும் இருக்கின்றனவா என்பதனையும் என்பதனைக் கண்டறிதல் அமைகின்றது.

**ஆய்வின் கருதுகோள்**

யாழ்ப்பாணத்தில் திரையரங்கு வழியான திரைப்பட இரசனை ஆரம்ப காலத்தைப் போல ஒரு குழும இரசனை என்ற மட்டில் காணப்படாமல் தற்காலத்தில் ஒரு குறுகிய வட்டத்திற்குள்

தனியாள் இரசனையாகவும் மாறியுள்ளது. திரையரங்கு வழித் திரைப்பட இரசனை குறைவடைந்திருப்பதுடன், அதற்கு நாட்டினது சூழல் மாத்திரமன்றி திரைப்படங்கள் தமது பரப்பையும் கடந்து கொண்டிருந்த சமூகச் செல்வாக்குகள் அருகியிருப்பதும் முக்கிய காரணமாகின்றது.

**மாதிரிகள் வடிவமைப்பு**

ஆய்வு பரப்பிற்கு உட்படக்கூடிய அனைத்தையுமே விசாரணைக்கு உட்படுத்துவது எப்போதும் சாத்தியமானது இல்லை. எனவே, ஆய்வு செம்மைபெற அதனை சரியாக பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய ஒரு தொகையினை பதிவு செய்து ஆய்வு செய்தல் ஆய்வு நோக்கத்தை அடைய வழி செய்கின்றது.

இந்தவகையில், யாழ்ப்பாணத்தில் திரையரங்கு வழியான திரைப்பட இரசனையை ஆய்வு செய்வதற்குத் யாழ்ப்பாணத்தின் திரையரங்கு உரிமையாளர்கள், இரசனை இயக்கங்களை சேர்ந்தவர்கள், இரசிகர் மன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை இனங்கண்டுகொள்ள இயல்தகைமை மாதிரித் தெரிவுமுறை கையாளப்பட்டிருந்தது.


**தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்**

இந்த ஆய்வுக்கான முதனிலைத் தரவுகளாக ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட திரையரங்குகள் பற்றிய விடயங்களை அறிவதற்கு அவதானிப்பு, நேர்காணல்கள், குவிமையக் கலந்துரையாடல்கள் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன.

இவ் ஆய்வில் தகவல் தரவல்ல உறுப்பினர்களைத் தெரிவு செய்து தகவல் திரட்டும் முறையில், திரையரங்கு சார்ந்த நபர்களிடம் ,ருந்து மாதிரிகள் நேர்காணல்களுக்காகத் தேர்வானதுடன், திரைப்பட இரசிகர்கள் மாதிரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மத்தியிலான குவிமையக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ,ரசிகர் மன்ற உறுப்பினர்களுடன் தனியான சிறப்பு கலந்துரையாடலும் ,டம்பெற்றது. மேலும், திரையரங்குகளின் தோற்றம், திரையரங்குகள் எவ்வாறான திரைப்பட ,ரசனையை உருவாக்கும், வழிச்செலுத்தும் தளங்களைக் கொண்டிருந்தன, திரையரங்குகளில் வெற்றி பெற்று ஓடிய திரைப்படங்கள், அதற்கான காரணங்கள் போன்றனவும் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், திரைப்படத் திறனாய்வாளர்கள், திரைப்பட ,ரசனை ,யக்கங்களில் செயற்பட்டோர் ஆகியோரிடமும் நேர்காணல்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

,ரண்டாம் நிலைத் தரவுகளாக ஊடகத்துறை சார்ந்த நூல்கள், ,லங்கையில் சினிமா சார்ந்து வெளிவந்திருக்கக்கூடிய நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகளில் வெளிவந்த செய்திக் கட்டுரைகள் போன்றவற்றின் மூலமாகத் தகவல்கள் திரட்டப்பட்டன.

## கருத்துநிலைச் சட்டகம்




## கலந்துரையாடலும் ஆய்வுப் பெறுபேறுகளும்

திரட்டப்பட்ட தகவல்கள் பின்வரும் தலைப்புக்களினூடாக நோக்கப்பட்டும் கலந்துரையாடப்பட்டும், ஆய்வின் பெறுபேறுகள் எட்டப்பட்டன.

## திரையரங்குகளும் திரைப்படங்களும்

ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள திரையரங்குகள் ,ன்றுள்ளபோதான கட்டமைப்பு வசதிகளின்றி, கொட்டகைகளாக ,ருந்தபோதும், அவற்றில் திரைப்படம் பார்த்த திருப்தி ,ன்றைய திரையரங்குகளில் ,ல்லை என ,ரசனையாளர்கள் கூறுகின்றனர். எம்.ஜி.ஆர், சிவாஜி போன்ற பிரபல நடிகர்களின் திரைப்படங்கள் திரையிடப்பட்டபோது, ,ரசிகர்களிடையே ஒருவருக்கொருவரான போட்டித்தன்மையும், கருத்துமோதல்களும் ,ருந்துவந்தபோதும் திரைப்படத்திற்குள் ஒன்றிக் குழும ,ரசனையோடு திரைப்படம் பார்த்த வரலாறு உள்ளது. தற்காலத்தில் காணப்படும் ,ரசனையானது ஆரம்ப காலத்தைப் போல குழுவாக ஒன்றித்த ,ரசனையாகக் காணப்படவில்லை. வெறும் பார்வையாளர்களாக மட்டுமே ,ரசிகர்கள் காணப்படுகின்றனர் என்ற அபிப்பிராயமே மேலோங்கியிருப்பது ஆய்வாளரால் கண்டறியப்பட்டுள்ளது.

சில சமயங்களில், தற்போதும் குழுவாக ,ரசிக்கும் மனோநிலை சிற்சில ,ரசிகர்களிடம் காணப்பட்டாலும், அது திரைப்பட நிறைவுடன் முற்றுப்பெறுவதாகவும் தொடர்ந்த கலந்துரையாடல்களோ, விவாதங்களோ முறைசார்ந்தும் சாராமலும் நடாத்தப்படும் சந்தர்ப்பங்கள் அருகி, குழும ,ரசனை 'மகிழ்ச்சியடைதல்' என்ற நிலையுடன் நின்றுவிடுவதாகவும் அறியக்கிடைக்கின்றது. அதாவது, திரையரங்கில் திரைப்படம் பார்ப்பதென்பது பெருமளவிற்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே தற்போது உள்ளது. ஒரு சிலர் நடிகர்களின் பெயர்களில் ,ரசிகர் மன்றங்கள் அமைக்கப்பட்டாலும், அவை கட்டமைப்புரீதியில் மிகப் பலவீனமான நிலையிலேயே உள்ளன. குறித்த நடிகர்களின் திரைப்படங்கள் திரைக்கு வரும் காலப்பகுதியையொட்டி, பதாதைகள் வைப்பதும், வெடிகள் கொளுத்துவதும், மாணவர்களுக்கு சில கற்றல் உபகரணங்களை வழங்குவதான உதவிகள் புரிவதாகவும் அறியமுடிகின்றது.

,ன்றைய தொடர்பாடல் வளர்ச்சியில், சமூக ஊடகங்களில் திரைப்படங்கள் தொடர்பான கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் பகிரப்படுவது அவதானிக்கப்பட்டாலும், அதுவும் குழும நிலையிலான விவாதங்களுக்கு நீட்சிபெறுவதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் குழும இரசனை அருகிப்போனமைக்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. திரைப்படம் என்பது திரையரங்குகளில் மட்டுமே பார்க்கப்பட வேண்டிய தேவை தற்போது இல்லை. தொலைக்காட்சியிலும், இறுவட்டுக்கள் போன்றவற்றிலும் திரைப்படத்தைப் பார்க்கலாம் என்ற மனோபாவம் இரசிகர்களிடையே அதிகம் வளர்ந்திருக்கிறது. குறிப்பாக, ,றுவட்டுக்கள் சட்டத்திற்கும் வணிக அறநெறிகளுக்கும் புறம்பானவை என்பது இரசிகர்களுக்குத் தெரிந்திருந்தாலும், அது பற்றிய குற்ற உணர்வு பொதுவாகக் காணப்படுவதில்லை.

திரைப்படங்கள் கொண்டிருக்கக்கூடிய கதை, திரைக்கதை, உரையாடல்கள் மீதான பொதுசன ஈர்ப்புக் குறைவடைந்திருப்பதும் மற்றுமொரு காரணமாக அறியக்கிடைக்கின்றது. ஆரம்பத்தில் குடும்ப கதைகளும் அவற்றில் காணப்பட்ட காதல், நகைச்சுவை, சண்டைக்காட்சி, ,றுதியில் நியாயம் வெல்லும் என்கின்ற கதை களத்துடன் கூடிய கதைகள் இரசிகர்களிடையே நல்ல மதிப்பைப் பெற்றிருந்தன. இது, உளவியல்ரீதியில் மக்கள் தம்மைத் திரைப்படங்களோடு ஒன்றித்திருக்கவும், தம்மைத் திரைப்படங்களில் அடையாளங்காணவுமாகச் சாதகமாயிருந்தது. வாழ்கை விழுமியங்களைப் பேசும், பழம் பெருமைகள், வீரத்தைக் கதைக்களமாகக் கொண்டும் திரைக்கதைகள் அமைக்கப்பட்டு, அவ்வாறான திரைப்படங்கள் மக்களிடம் வரவேற்பைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் போக்குவரத்து செய்யக்கூடிய நிலை இன்று ஒப்பீட்டளவில் அன்றைய நிலையிலும் இலகுவாயிருந்தாலும், அது திரைப்படம் பார்த்தல் என்ற செயற்பாட்டுக்கான திரட்சியை இரசிகர்களிடம் அதிகம் உருவாக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் கடந்த ஆண்டுகளில் இருந்த சூழல், இறுவட்டுக்களின் பரவல் இதற்குக் காரணங்களாகின்றன.

## திரையரங்குவழி நாயகக் கட்டுமானங்கள்

திரையரங்குகள் வழியான திரைப்பட இரசனை என்கின்ற விடயமானது நடிகர்களையும் அவர்களது நடிப்புத் திறனையும் மையமாக வைத்துக் கட்டியெழுப்பப்படுகின்றது என்பது நிராகரிக்கப்படக் கூடிய விடயமல்ல.

திரையரங்குகள் கொண்டிருக்கும் பௌதிக அமைப்பு, குறிப்பாகத் திரையில் எறிகைக்கு உட்படுத்தப்படும் யதார்த்தத்திலும் பிரமாண்டமான விம்பங்கள், நாற்காலிகளில் கீழிருந்து மேனோக்கிப் பார்வையிட ஏதுவான பார்வைக் கோணம் பார்வையாளர்களிடம் உருவாக்கும் பிரமிப்புடன்கூடிய உள அர்த்தங்கள், செவிப்பறைகளில் மோதும் இயல்நிலைக்கும் அதிகமான, உணர்வுருவாக்கத்தை மையமாகக் கொண்ட பின்னணி இசை, திரையரங்குகளில் காணப்படக்கூடிய பதாதைகள் ஆகியன ஒரு நாயகக் கட்டுமானத்தை உருவாக்கத் துணைபுரிகின்றன.

அதுவேளை, ஆரம்ப காலத்தில் நடிகர்கள் தங்கள் கதாபாத்திர வடிவமைப்புக்களில் அதிக கவனம் செலுத்தியதோடு, மக்களில் ஒருவர் என்கின்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் கட்டியெழுப்பியும் வைத்திருந்தனர். இதனால் கவரப்பட்டும் அதற்கெனத் தனியான கூட்டமும் உருவானது.

அத்தகைய நாயகர்களைத் திரையில் பார்க்கவும், அதனூடாக உள மகிழ்ச்சியடையவும் திரையரங்க அனுமதிச்சீட்டைப் பெறுவதற்கு இரவு, பகல் எனப் பாராமல் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையும் இரசிகர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

திரைப்படங்களை இரசித்தல் என்பது திரையரங்குகளுக்கும் அப்பால், பார்த்தல் என்ற நிகழ்வுக்கு முன்னும் பின்னுமாகக் கூட நீடிப்பைக் கொண்டது என்பதற்கு, செவிப்புல ஊடகமான வானொலி இன்றுபோல அன்றும் செல்வாக்கைச் செலுத்தியிருக்கக் காணப்பட்டது.

அந்தவகையில், அன்றைய திரைப்படங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தது இலங்கை வானொலி ஆகும். திரைப்படப் பாடலை ஒலிபரப்புச் செய்து அதிலிருந்து திரைப்படம் தனக்கான இரசிகர் கூட்டத்தை உருவாக்க அது வழிகோலியது.

## திரையரங்கம்வழித் திரை இரசனையை ஊக்குவித்த காரணிகள்

யாழ்ப்பாணத்து திரையரங்கு வழியான திரைப்பட இரசனை முக்கியமாக மக்களிடத்தில் ஓர் முறைசாரா இயக்கமாகவும் கட்டியெழுப்பப்படக் காரணம் அக்காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பாவனையில் இல்லாமலிருந்தமையாகும். அதாவது, திரைப்படம் பார்ப்பது என்றால் திரையரங்கிற்கு வந்துதான் ஆக வேண்டும் என்பது கட்டாயமாக அமைந்தது.

மக்களின் போக்குவரத்திற்கு வசதியாகவும் யாழ்ப்பாண நகரை அண்மித்ததாகவும் திரையரங்குகள் பல காணப்பட்டமை திரையரங்கம்வழித் திரை இரசனையை ஊக்குவித்த

மற்றுமொரு காரணியாகும். அதேவேளை, யாழ்ப்பாணத்துத் திரையரங்குகளின் உட்கட்டுமான வசதிகளும் மக்கள் திரைய ரங்குகளை நாடி, திரை இசைனையைக் கட்டியெழுப்ப வாய்பளிப்பதாயிருந்தது. வாகனத் தரிப்பிடங்கள், மக்களுக்கேற்ற சிற்றுண்டிச்சாலை என பார்வையாளர்களைக் கவர்ந்திழுப்பதற்காகவே திரையரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத் திரையரங்குகள் தமிழ் திரைப்படங்கள் மட்டுமல்லாது ஆங்கில, ஹிந்தித் திரைப்படங்களையும் திரையிட்டு, அவற்றுக்கெனத் தனியான இரசிகர்களையும் உருவாக்கியிருந்தன.
குறிப்பாக ஆங்கில திரைப்படங்களை அந்த கால மாணவர்கள், இளைஞர்கள் பார்த்து, திரை இரசனைக்கப்பால் தமது பிராந்தியம், பண்பாடு கடந்த அறிவையும் பெற்றுப் பயன் அடைந்ததாக அறியமுடிகின்றது.

நெருக்கடியான சூழலிலும் திரையரங்குகள் தொடர்ச்சியாகத் தமது பணிகளையாற்றி வந்தமையும், அத்தளத்திலிருந்து எழுந்த திரை இரசனையை ஊக்குவிப்பதாக ,ருந்துவந்துள்ளது. போர்க்கால சூழ்நிலையிலும் மின்சாரம் இல்லை என்றாலும் கூட, திரையரங்குகள் தமது திரையிடலை நிறுத்தாமல் மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்) உதவியுடன் திரைப்படங்களைத் திரையிட்டு இரசிகர்களைத் தம்வசம் வைத்திருந்தன. உயிர் அச்சுறுத்தல்கள், எழுந்தமான குண்டுத்தாக்குதல்கள் தீவிரம்பெற்ற காலப்பகுதிகளிலும் திரையரங்குகளில் திரைப்படம் பார்ப்பதற்காக மக்கள் ஆர்வத்துடன் அவற்றை நாடி வந்ததாக இதன் மூலம் அறியமுடிகின்றது.

## திரை இரசனை உருவாக்கிய சமூக மாற்றங்கள்

திரையரங்குகள் வழியான திரை ,ரசனை, தனித்துப் பொழுதுபோக்குத் தளத்தில் மாத்திரமல்லாது, மக்களின் தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்கைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை விதைத்தே வந்துள்ளன.

திரையரங்கில் திரைப்படம் பார்க்கச் சென்ற அநேகரும் ஏதாவது ஒரு மாற்றத்தைத் தம்மகத்தே உணர்ந்திருப்பார்கள். அவற்றுள் முக்கியமாக, குறிப்பிட்ட ,ரசனையிலிருந்து ‘போலச் செய்தல்’ பண்பு திரைப்படப் பார்வையாளர்களிடம் உருவாக்கப்பட்டது. அதாவது, திரை நடிகர்களைப் பார்த்து அவர்களைப் போல ஆடைகள், நாகரிகங்கள், நடத்தைகள் என்பன பின்பற்றப்பட்டன.

ஆரம்பகாலத் திரைப்படங்களை திரையரங்கில் பார்ப்பதனூடாக நேர்முக நோக்கில் அறவியல், ஒழுக்கவியல் கருத்துக்கள் பரப்பப்பட்டதாகவும் விழிப்புணர்வு சார்ந்த எண்ணக்கருக்களும் உருவாக்கப்பட்டதாகவும் கருதப்பட்டது.

## திரை இரசனை உருவாக்கிய தனிப்பட்ட வாழ்க்கை

1960 முதல் 1980 காலப்பகுதிகளில் இளையவர், முதியவர்கள், குடும்பத்தினர், காதலர்கள் எனப் பலருடைய வாழ்க்கையின் பொழுதுபோக்குக் களம் அமைத்த திரையரங்குகள் தனிநபர் வாழ்க்கைகளிலும் கணிசமான மாற்றங்களை உருவாக்கியிருந்தன.

தாம் வாழ்ந்த பகுதிகளிலும், அங்கிருந்த பொது இடங்களான மைதானங்கள், கோவில்கள் ஆகியவற்றுக்கும் மட்டுப்பட்டிருந்த தனிநபர் ஊடாட்டம், திரையரங்குகளை நோக்கி நகர ஆரம்பித்திருந்தமை, யாழ்ப்பாணப் பண்பாட்டுச் சூழலில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாகக் கருதப்படலாம். இந்த ஊடாட்டம், தனிநபர் - குடும்பம் - நண்பர்கள் - ஊரவர் என விரிவுகண்டதும் ,ங்கு கவனிக்கத்தக்கது.

திரைப்படம் திரையிடப்படும் முதல் நாள் பலர் வரிசையில் காத்திருந்து தமது சொந்த, அன்றாடப் பணிகளையும் விடுத்து, திரைப்படம் பார்த்ததாக அறியமுடிகின்றது. திரைப்படம் பார்ப்பதற்காக ஒவ்வொரு ஊர்களிலும் ,ருந்தும் தத்தமது வசதிக்கேற்ப வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு பல மணி நேரம் வரிசையில் காத்திருந்து திரைப்படம் பார்த்ததாகவும் அறியமுடிகின்றது. என்னென்ன திரைப்படங்கள் எந்தெந்தத் திரையரங்குகளில் திரையிடப்படுகின்றன என்கின்ற அத்தனை விடயங்களும் திரைப்பட ,ரசிகர்களுக்கு அறியப்பட்டதாகவும் அமைந்திருந்தது.

ஒருவகையில், யாழ்ப்பாணத்தவர்களின் தனிப்பட்ட வாழ்கையில், அவர்கள் கட்டுப்பாடுகளை விலக்கிவைத்து வெளிவந்த முக்கிய பொழுதுபோக்கு மையமாகத் திரையரங்குகள் அமைந்திருந்தன என்றால், அது மிகையில்லை என்றே கூறலாம்.

**ஆய்வின் முடிவுகளும் பெறுபேறுகளும்**

யாழ்ப்பாணத்திலுள்ள திரையரங்குகள் இன்றுள்ளபோதான கட்டமைப்பு வசதிகளின்றி, கொட்டகைகளாக இருந்தபோதும், அவற்றில் திரைப்படம் பார்த்த திருப்தி இன்றைய திரையரங்குகளில் ,ல்லை என இரசனையாளர்கள் கூறுகின்றனர்.

திரைப்படத்திற்குள் ஒன்றிக் குழும இரசனையோடு திரைப்படம் பார்த்த ஆரம்ப காலத்தைப் போல குழுவாக ஒன்றித்த இரசனை இன்று அருகிப்போயிருக்கிறது. வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இரசிகர்கள் காணப்படுகின்றனர் என்ற அபிப்பிராயமே மேலோங்கியிருக்கிறது.

தற்போதும் குழுவாக இரசிக்கும் மனோநிலை சிற்சில இரசிகர்களிடம் காணப்பட்டாலும், அது திரைப்பட நிறைவுடன் முற்றுப்பெறுவதாகவும் தொடர்ந்த கலந்துரையாடல்களோ, விவாதங்களோ முறைசார்ந்தும் சாராமலும் நடாத்தப்படும் சந்தர்ப்பங்கள் அருகி, குழும இரசனை 'மகிழ்ச்சியடைதல்' என்ற நிலையுடன் நின்றுவிடுவதாகவும் அறியக்கிடைக்கின்றது.

சமூக ஊடகங்களில் திரைப்படங்கள் தொடர்பான கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் பகிரப்படுவது அவதானிக்கப்பட்டாலும், அதுவும் குழும நிலையிலான விவாதங்களுக்கு நீட்சிபெறுவதாக ,ல்லை.
யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் போக்குவரத்து செய்யக்கூடிய நிலை இன்று ஒப்பீட்டளவில் அன்றைய நிலையிலும் இலகுவாயிருந்தாலும், அது திரைப்படம் பார்த்தல் என்ற செயற்பாட்டுக்கான திரட்சியை இரசிகர்களிடம் அதிகம் உருவாக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

திரைப்படங்களை இரசித்தல் என்பது திரையரங்குகளுக்கும் அப்பால், பார்த்தல் என்ற நிகழ்வுக்கு முன்னும் பின்னுமாகக் கூட நீடிப்பைக் கொண்டிருக்கிறது.
திரையரங்குகள் வழியான திரை ,ரசனை, தனித்துப் பொழுதுபோக்குத் தளத்தில் மாத்திரமல்லாது, மக்களின் தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்கைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை விதைத்தே வந்துள்ளன.

**எதிர்கால ஆய்விற்கான பரிந்துரைகள்**

எதிர்காலத்தில் இப்பரப்பில் ஆய்வினை மேற்கொள்பவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் திரை அரங்குகள், அவற்றின் மூலமான தாக்கங்கள், பார்வையாளர்கள் மத்தியில் திரைப்பட ஊடகங்கள் செலுத்தும் தாக்கங்கள் என்றவாறாக ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியும்.

மேலும், திரையரங்கில் திரை ,ரசனையைப் பெறும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோரை உள்ளடக்கி ஆய்வுகளை மேற்கொள்ளும்போது பன்முகப்படுத்தப்பட்ட தன்மையாக எதிர்கால ஆய்வுகள் அமையப்பெறலாம்.

காலமாற்றத்திற்கு ஏற்பவும், திரையரங்கு வழியான திரைப்பட ,ரசனை மாற்றத்துக்கு ஏற்பவும், தற்காலத் திரையரங்குகளுக்கு ஏற்பவும் வெவ்வேறு தளங்களிலும் எதிர்கால ஆய்வினை ஆய்வாளரால் வடிவமைத்துக் கொள்ள முடியும்.

**உசாத்துணைகள் :**

ஸ்டீபன். அ., (2011). மூன்றாம் பார்வை : திரை ஊடகங்கள் குறித்த அலசல் கட்டுரைகள், வெற்றி மொழி வெளியீட்டகம், சென்னை.
நந்தகுமார்.வை., (2008). ஆய்வு முறையியல், யுனி ஆட்ஸ், கொழும்பு.
சிவகுமாரன்.கே.எஸ்., (2001)., அசையும் படிமங்கள்., மீரா பதிப்பகம்., 21, முருகன் பளேஸ்., கொழும்பு - 06
தம்பிஜயா, தேவதாஸ்., (1994)., ,லங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை., வி. எஸ். துரைராஜா பதிப்பகம்., கொழும்பு.
ஜேசுராசா. அ., (2013)., திரையும் அரங்கும் கலைவெளியில் ஒரு பயணம்., துர்கா பதிப்பகம்.

**நேர்காணல்கள்:**

யேசுராஜா. அ., திரைப்பட விமர்சகர், நேர்காணல்: 19.10.2018., நேர்காணல் நிகழ்த்தப்பட்ட இடம் : யாழ்ப்பாணம், நேரம் : 10:00
அன்ரன்.செ., இரசிகர் மன்றத் தலைவர், நேர்காணல் : 01.08.2018., நேர்காணல் நிகழ்த்தப்பட்ட இடம் : குருநகர், நேரம் : 16:30
கொலின்.எப்., இரசிகர் மன்றத் தலைவர், நேர்காணல் : 03.08.2018, நேர்காணல் நிகழ்த்தப்பட்ட இடம் : குருநகர், நேரம் : 18:30
தர்மகுலசிங்கம். பொ., திரையரங்கு உரிமையாளர், நேர்காணல் : 09.01.2018., நேர்காணல் நிகழ்த்தப்பட்ட இடம் : யாழ்ப்பாணம், நேரம் : 15:00